**<u>தேதி:-25.03.2021 அசல்வழக்கு எண். 148/2010 பி.சா.2 (சந்திரன்)</u>**

**<u>முதல்விசாரணை:-</u>**

நான் 19 ஆம் பிரதிவாதி. 09.04.2012 அன்று 18 முதல் 22 பிரதிவாதிகள் சேர்ந்து 2, 3, 7, 8, 9 பிரதிவாதிகளிடமிருந்து தாவா 2 ஆம்லக்கச் சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் பதிவு நகல் **பி.சா.ஆ.8**. 19.11.2013 அன்று 18 ஆம் பிரதிவாதி 7, 3, 14, 15 பிரவதிகளிடமிருந்து தாவர் 1 ஆம்லக்கச் சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் பதிவு நகல் **பி.சா.ஆ.9**.19.11.2013 அன்று 18 ஆம் பிரதிவாதி 2, 8, 16, 17 பிரதிவாதிகளிடமிருந்து தாவா 1 ஆம் லக்கச் சொத்தில் மற்றொரு பகுதியை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் பதிவு நகல் **பி.சா.ஆ.10**. 19.11.2013 அன்று நான் 7, 13, 14, 15 பிரதிவாதிகளிடமிருந்து தாவா 1 ஆம் லக்கச் சொத்தின் மற்றொரு பகுதியை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் பதிவு நகல் **பி.சா.ஆ.11**. அன்றே 20 ஆம் பிரதிவாதி 3, 9 ஆம் பிரதிவாதிகளிடமிருந்து தாவா 1 ஆம் லக்கச் சொத்தின் மற்றொரு பகுதியை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் பதிவு நகல் **பி.சா.ஆ.12**. அன்றே 22 ஆம் பிரதிவாதி 3, 9 பிரதிவாதிகளிடமிருந்து தாவா 1 ஆம் லக்கச் சொத்தின் மற்றொரு பகுதியை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் பதிவு நகல் **பி.சா.ஆ.13**. ஆகவே நாங்கள் கிரையம் பெற்ற சொத்துக்களை எங்களுடைய பாகத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.